**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்**

**அசல் வழக்கு எண்.135/2020**

**PW1**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.கோபாலகிருஷ்ணன் | த/பெ.திரு.கபீர்தாஸ் | நாள்.08.09.2025 |

வா.சா.1 அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

வாதி கோயிலுக்கு என் தாத்தா சுப்பராயனும் சேர்ந்து செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். நான் சுப்பராயன் என்பவரின் பேரன் என்பதை காட்டுவதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்து வாதி கோயிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 3 வது தரப்பினர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டு அதன் மூலம் வாதி கோயிலுக்கு வருமானம் வந்தது என்பதை காட்டும் ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2. காந்தாமணி அம்மாள் வாய்மொழியாக பயிர் செய்ய அனுமதிக்கப்பட்டார் என்பதை எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் ஊர் பொதுமக்கள் கூட்டம் போட்டோம். காந்தாமணி அம்மாள் பெயரில் ஆவணம் இருந்தால் வாய் மொழியாக நாங்கள் பயிர் செய்ய அனுமதி கொடுத்தோம் என்றால் தவறு. காந்தாமணி அம்மாள் அவரது செல்வாக்கின் அடிப்படையில் பட்டா மாற்றிக்கொண்டார் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் சொத்து முதலில் கோயில் வசம் இருந்தது. அதன் பிறகு காந்தாமணி அம்மாள் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டார்.

3. காந்தாமணி அம்மாள் பெயரில் ஆவணம் இருந்து அவர் பட்டா மாற்றி இருந்தால் அது சரிதான். காந்தாமணி பெயரில் பட்டா வந்ததற்கு நாங்கள் கொடுத்த ஆட்சேபணை மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆட்சேபணை மனுவை எந்த தேதியில் கொடுத்தோம் என்றால் தேதி நினைவில்லை. 2011 க்கு பிறகு காந்தாமணி அம்மாள் பயிர் வைக்கவில்லை. அதன் பிறகு கிராம பொதுமக்களில் ஒருவர் 3 வருடத்திற்கு ஒரு முறை என பயிர்

வைத்தார்கள். தாவா சொத்தில் சவுக்கு பயிர் வைப்போம். தாவா சொத்துக்கு அடங்கல் எதாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பயிர் வைத்ததாக கூறும் ஊர் பொதுமக்கள் பெயரில் அடங்கல் உள்ளதா என்றால் இல்லை.

4. ஷாலினி பெயரில் கிரையம் கொடுத்தது தெரியுமா என்றால் தெரியும். அது சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்த வழக்கு பற்றி தெரியும். அந்த உரிமையியல் நீதிமன்றத்தில் சேஷன் ஷாலினிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என அறிவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் சமரசம் பேசி சொத்து கோவிலுக்கு தான் என ஒப்புக்கொண்டார்கள். அதன் பிறகு கோவில் பெயரில் அடங்கல் ஏற்பட்டதா என்றால் இல்லை. கோவில் சொத்தின் அனுபவத்தை ஏற்றுக்கொண்டதா என்றால் இல்லை. தற்போது வரை சொத்தின் பட்டா காந்தாமணி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

5. சொத்தின் பட்டாவை மாற்ற முயற்சி எடுக்கவில்லை என்றால் முயற்சி எடுத்தோம். ஆனால் மாற்றமுடியவில்லை. ஆவணங்கள் எதுவும் பார்க்காமல் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. மோகன் எனக்கு பெரியப்பா மகன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றாலும் மோகன் எனக்கு அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)